# ஆய்த எழுத்து


பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**AYIDHA EZHUTHU**

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் - 2018

9





visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UCG RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

மலர் : 6 அக்டோபர்-2018 இதழ் : 10

பதிப்பாசிரியர்

நல். நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
82489 54308, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com

## EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madhrai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Saukaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Tricky.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
aranganatnou@gamil.com

## ஆசிரியர் குழு

**முனைவர் சி.தியாகராசன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
mkutamil2010@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
alibavapkm@gamil.com

**முனைவர் க.அரங்கநாதன்**
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
சென்னை
aranganatnou@gamil.com

14. தன்வரலாற்று நாவல்களில் திருமணம்

*செ.மகாலிங்கம் - 43

15. சிவசங்கரி நாவல்களில் பெண்களின் சமூக நிலை

*அ.மலர்கொடி - 46

16. பண்பாடு பேசும் பத்துப்பாட்டு

*முனைவர் மாணிக்க.வீரமுருகன் - 49

17. குறுந்தொகையில் ஔவையார் குறிப்பிடும்
பெண்களின் வாழ்வியல் நெறி

*த.புவனேஷ்வரி - 54

18. சங்கப்புறப்பாடல்களில் கலைத்தொழில், அடிமைத்தொழில்

*த.ராமலெட்சுமி - 57

19. 'முதற்கனல்' நாவலில் தொன்ம வழி ஜெயமோகன்
கட்டமைக்கும் வருணாசிரமம்

*ரா.நாகஜோதி - 60

20. இலக்கிய நாடககாட்சித் தொடர்பியலில் நடிகனும்பார்வையாளனும்

*ப.கருப்புசாமி - 63

21. சங்க இலக்கியங்கள் காட்டும் பாண்டிய நாடு

*முனைவர் ப.பிரதிபா - 66

22. நாலடியாரில் மகளிர் பதிவுகள்

*ப.சரஸ்வதி - 70

23. புதினஇலக்கியம் புலப்படுத்தும் பெண்ணின்உள்மன ஆளுமை

*முனைவர் அ.பூரணலதா - 73

24. என். ஸ்ரீராமின் 'அத்திமரச்சாலை' நாவலில் மக்களின் வாழ்வியல்

*எஸ்.பிரேமா - 76

25. குறுந்தொகை - இயற்படமொழிதல் வழி அகவாழ்வியல் கோட்பாடு

*முனைவர் சீ.புஷ்பலதா - 78

26. மதுரைக்காஞ்சியில் பழந்தமிழர் வாழ்வியல்

*இரா.கலைவாணி - 81

# குறுந்தொகையில் ஔவையார் குறிப்பிடும் பெண்களின் வாழ்வியல் நெறி

*த.புவனேஷ்வரி, முனைவர் பட்ட ஆய்வாளர், சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி.

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்த ஒழுக்க வாழ்வினை வாழ்ந்த பழந்தமிழர்களின் வாழ்வியல் நிலைகளைக் குறுந்தொகைப் பாடல்களின் கருத்துகள் வாயிலாக அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். களவுக்கால, கற்புக்கால வாழ்வினில் பெண்களின் மனநிலையை தமது பாடல்களில் பெண்பாற்புலவர்கள் பதிவு செய்துள்ளனர். அத்தகைய பெண்பாற்புலவர்களில் சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் குறிப்பிடத்தக்கவர். ஔவையார் பாடிய குறுந்தொகைப் பாடல்களில் பெண்களின், அகவாழ்வியல் நெறியினை அறிந்துக்கொள்ள முடிகிறது.

**ஔவையார் குறிப்பிடும் பெண்களின் மனநிலை**

சங்ககால ஔவையாரால் இயற்றப்பட்ட 14 பாடல்கள் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. சங்ககால ஆளுமை நிறைந்த பெண்பாற் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் இவர். அறம் பாடி மன்னர்களை அறைகூவல் விடுத்தவர். அன்றைய கால அகவாழ்வினில் பெண்களின் வாழ்வியல் நெறியினை இவர் பாடல்களில் காணலாம்.

களவுகால வாழ்வினில் பெண்கள் ஒருவித மனநிலையில் வாட்டமுற்று காணப்படுவர். அத்தகைய களவு காலத்தில் சங்ககாலத் தலைமகளது உடல் மெலிந்து வாட்டமுற்ற நிலையினைக் கண்டதோழி அறத்தொடு நின்று, குறிச்சொல்ல வந்த கட்டுவிச்சியை நோக்கி தலைவனது நல்ல நெடுங்குன்றத்தை (ஊரை) பற்றிப் பாடிய பாடலை மீண்டும் பாடுவாயாக என்று கூறுகிறாள்.

**"அகவன் மகளே! அகவன் மகளே!..."** (குறுந். பா.23)

உடலையும் உள்ளத்தையும் வருத்தும் காமநோயால் வாடும் தலைவி, தன்னை வருத்திக்கொள்ள முற்படுகிறாள், அவளுக்கு இரவுநேரத்தில் அமைதியாக உறங்கும் ஊரும் கோபத்தை அதிகரிக்கச் செய்யும் களமாய் அமைந்திருக்கிறது. இதனை ஔவையார்,

**"முட்டுவேன் கொல், தாக்கு வேன்கொல்;..."** (குறுந்.பா.28)

என்ற பாடலின் வழி காமநோய்மிகுதியால் சுழன்று அசையும் காற்று என் உடலையும், உள்ளத்தையும் வருத்துகிறது. அமைதியாக உறங்கும் ஊர் மீது எனக்கு கோபம் எழுகிறது. இவ்வூர் மேல்வரும் எனக்குரிய கோபத்தால் நான் முட்டிகொள்வனா? தடிக்கொண்டுதாக்குவேனோ? ஒருத்தியாகிய நான் வெறிப்பிடித்தது போன்ற தன்மை மேலிட்டு ஆஅஒல் என வாய்விட்டு அலறி கூவுவேனா? என்ன செய்வது என்று தெரியவில்லை என்று புலம்புகிறாள்.

'வின்செஸ்டர், "துன்ப உணர்ச்சிகள் இலக்கியத்திற்கு பொருந்தா எனக் கூறினும் இரக்க உணர்ச்சியும், அவல உணர்ச்சியும் இலக்கியத்திற்குரிய உயர்தர உணர்ச்சிகள் என்பர்" (ஆ.கணேசன் - இலக்கிய தென்றல் ப.62)

களவுக்காலத்தை நீட்டிக்க விரும்பாத தலைவி தலைவனிடம் வரைந்துகொள்ளக் கூறுகிறாள், ஆனால் தலைமகன் மீண்டும் களவொழுக்கத்தையே விரும்பி நிற்கிறான். இதனால் வாட்டமுற்ற தலைவி தன் மனதிடம் கூறுவதாகக் குறிஞ்சி நிலப் பாடல் அமைந்துள்ளது இந்நிலையினை இன்றைய காதல் வாழ்விலும் காண முடிகிறது.

**"நல்லுரை யுகந்து புல்லுரை தாஅய் ..."** (குறுந்.பா.29.)

மனமே' நீ எனது நல்ல அறிவுரைகளைக் கேளாமல் நீக்கிப் பயனற்ற உரைகளைப் பற்றிக் கொண்டு மழைநீரின் எதிரில் வைக்கப்பட்ட சுடாத பச்சை மண் பானைப்போல சிதைந்து போவது போலானாய். அதைப்போன்று உன் மனப் போராட்டமானது உயர்ந்த மரக்கிளையில் சிறுகுட்டியால் தழுவப்பெற்ற பெண்குரங்குபோல அமைந்துள்ளது என்று கூறுகிறாள்.

களவுக்காலத்தில் தலைவி தலைமகன் தன்னைவிடுத்துப் பிரிந்து செல்லமாட்டான் என்று அலட்சியமாய் இருந்துவிடுகிறாள். ஆனால் அவன் பிரிந்து சென்று விட அதனைத் தோழியிடம் கூறுகிறாள்

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550